திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியோடு, கூடுதலாக ஒரு விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். நாகப்பட்டினத்தில் மருத்துவக் கல்லூரி சிறப்பாகத் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் சேர்க்கை முடிந்து, வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அங்கு எப்பொழுது முதல் நோயாளிகள் வரவழைக்கப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டே தொடங்கிட வேண்டும்; மருத்துவக் கல்லூரிகளில் இந்த ஆண்டே மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து ஒன்றிய அரசிடமும், இந்திய பிரதமர் அவர்களிடமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கடந்த 2 மாதங்களுக்கு முன்னர், 11 மருத்துவக் கல்லூரிகளும் திட்டமிட்ட நேரத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், நோயாளிகளுக்கான புற கட்டட வசதி போன்ற கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரையில், இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பொதுமக்கள் வந்து சிகிச்சை பெறுவதற்குண்டான மருத்துவ வசதிகள் அங்கே ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

258—

சார்நிலைக் கருவூலம்

***12015—திரு. ஆ. அருண்மொழிதேவன்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 மே 10]

கடலூர் மாவட்டம், புவனகிரியில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைப்பது தொடர்பாக கருத்துரு வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, உரிய நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு, அரசின் நிதி நிலைமை மற்றும் திட்டம் செயல்படுத்தப்படும் தன்மை அறிந்து, கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்நிலைக் கருவூலம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 11-8-2014 அன்று புவனகிரி வட்டம் துவக்க உத்தரவிடப்பட்டு, 2-6-2015 முதல் புவனகிரி வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. புவனகிரி வட்டத்திற்குள் இருக்கின்ற புவனகிரி ஒன்றியம், புவனகிரி பேரூராட்சி, சேத்தியாத்தோப்பு பேரூராட்சி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பரங்கிப்பேட்டை பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் 71 அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் அனைவரும் தற்போது சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் வரை பயணித்து, சிதம்பரம் சார்நிலைக் கருவூலத்திற்குச் சென்று வருகிறார்கள். எனவே, இந்த ஆண்டே புவனகிரியில் சார்நிலைக் கருவூலம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எங்கெங்கு, எந்தெந்த சூழ்நிலையில், புதிய அலுவலகம் அமைக்க வேண்டுமென்று முன்பிருந்த அரசாங்கத்தில் ஒரு G.O. அளிக்கப்பட்டு, அந்த விதிமுறைகளின் அடிப்படையில், இன்று வரை செயல்பட்டு வருகிறோம். நான் மானியக் கோரிக்கையின்போது அறிவித்தது, புது system-IFHRMS வந்த பிறகு, கருவூலம் மற்றும் கணக்குத் துறை-Commissionerate of Treasuries and Accounts-க்கு ஒரு Procedure Code-விதிமுறை திட்டத்தை மறுசீரமைத்து, புதிய திட்டத்திற்கேற்ப, எத்தனை ஊழியர்கள், எங்கே இருக்க வேண்டும்; எத்தனை அலுவலகங்கள் தேவை என்பதை ஆராய்ந்து, பணியை மாற்றி, பணிக்கேற்ப அலுவலகம் அமைக்கப்படுமென்று அதில் கூறியிருந்தேன். அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, உடனடியாக பழைய G.O. விதிமுறையின் அடிப்படையிலோ அல்லது புதியதாக வருகிற விதிமுறையின் அடிப்படையிலோ எவ்வளவு விரைவில் செய்து முடிக்க முடியுமோ அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய உத்தரவின்படி, புவனகிரி வட்டாட்சியர் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் 12-12-2018 முதல் இயங்கி வருகிறது. அந்த அலுவலக வளாகத்திலேயே சார்நிலைக் கருவூலம் கட்டுவதற்குத் தேவையான இட வசதி உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசு அலுவலர்கள், அரசு ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்ட வயதான ஒய்வூதியர்கள் என அனைவரும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்ற சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி, விரைந்து அவசர, அவசிய முக்கியத்துவம் கருதி, புவனகிரியில் சார்நிலைக் கருவூலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், கடலூர் மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீமுஷ்ணம்,

வேப்பூர் ஆகிய தாலுகாக்களிலும் சார்நிலைக் கருவூலங்கள் இல்லை. அங்கும் சார்நிலைக் கருவூலங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டு, அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வகைகளிலும் மக்களைத் தேடி சேவை செல்ல வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசாங்கத்தின் இலக்கு, கொள்கை. அதனால்தான் "மக்களைத் தேடி மருத்துவம்", "இல்லம் தேடி கல்வி" என்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதே அடிப்படையில், எத்தனை ஓய்வூதியதாரர்கள் இருக்கின்றார்களோ, எத்தனை பணியாளர்கள் இருக்கின்றார்களோ, எல்லோருக்கும் direct transfer மூலம் bank—ல் போய் சேருகின்ற மாதிரியும், அதில் புகார் வந்தால் Call Centre மூலமாக அதை நிறைவேற்றும்வகையிலும் செயல்படுவதுதான் தொலைநோக்குப் பார்வையினுடைய அடிப்படைக் கொள்கை. எனினும், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலைக்கு, எங்கே physical office தேவை என்பதை அறிந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அங்கே பலருக்கு சிக்கல்கள் இருக்கும் என்று அறியவந்தால் அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

259—

பள்ளிவாசல் புனரமைத்தல்

***7852—திரு. சீ. கதிரவன்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—